## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 12.09.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா பக்கராவின் 154 முதல் 158 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள் :**

பொருள்: நம்பிக்கைக் கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை, இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால் , நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.

ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (தூதரே!) பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக.

அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள்.

இத்தகையோருக்குத் தங்களின் இறைவனிடமிருந்து, அருளும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:154–158)

நான் ஓதிய வசனங்களிலிருந்து நான் கூற வருகிற கருத்து இங்கு சிலருக்கு தெரிய வரலாம். சில நாட்களுக்கு முன் நமது சகோதரர்கள், பெரியவர்கள் சிலரின் **ஷ**ஹாதத் நடந்துள்ளது. அதனைப் பற்றி கூறவிருக்கிறேன்.

இந்த வசனத்தில் பொறுமை, துஆ, ஷஹீதுகளின் அந்தஸ்து, சோதனைகளின் காரணம், இறை திருப்தியின் மீது திருப்தி கொள்வது பற்றிய கவனமூட்டல், அவ்வாறு செய்வதால் இறைவனிடமிருந்து வெகுமதி பெறுதல் ஆகிய விஷயங்களை அல்லாஹ் கூறுகிறான்.

இந்த விஷயங்கள்தான் ஒரு மூஃமின் (நம்பிக்கையாளர்), உண்மையான மூஃமினாக இருப்பதற்கு அடையாளமாக உள்ளன.

**இந்த வசனங்களுள் நான் முதலில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

ஈமான் கொண்டவரின் ஒரு அடையாளம் என்னவென்றால், பிரச்சனை வரும் போது அவர் பதற்றமடைவதில்லை. மாறாக, அவரது கவனம் முழுவதும் இறைவன் பக்கம் திரும்புகிறது. இறைவன் பக்கம் தான் ஒரு மூஃமினின் கவனம் திரும்ப வேண்டும்.

ஒரு மூஃமினின் உடனடி எதிர்நடவடிக்கை, அவர் **இஸ்தயீனுபிஸ்ஸப்ரி வஸ்ஸலாத்** – பொறுமையுடனும், தொழுகையுடனும் உதவி தேடுங்கள் என்ற வசனத்தின் கருத்தை தன்னிடம் வெளிப்படுத்துவதாகும்.

எனவே, ஒரு மூஃமினை அல்லாஹ் எச்சரிக்கின்றான். உங்களுக்கு பிரச்சனைகள் வரும்; துன்பம் வரும். ஆனால், உங்களின் ஈமானின் உறுதிப்பாடு அத்தகைய நிலையில் எவ்வாறு இருக்க வேண்டும் எனில், பொறுமையுடன் அதனை சகித்துக் கொள்ள வேண்டும். எந்த நிம்மதியின்மையும், பதற்றமும் காட்டக் கூடாது. அல்லாஹ்விடத்தில் குறைபட்டுக் கொள்ளக் கூடாது. இரண்டாவது அதனை அகற்றுவதற்காக மனிதனின் முன் குனியக் கூடாது. முழுக்க முழுக்க இறைவன் முன் மட்டுமே குனிய வேண்டும். அவனிடமே துஆ கேட்க வேண்டும். நமது ஈமான், உறுதியான நிலை நிற்றல், உறுதியான பரக்கத்திற்காக இறைவனிடம் உதவி கேட்டவாறு மூஃமின்களிடம் இறைவன் ஒப்படைத்த பணியை உறுதியுடன் செய்ய வேண்டும். அப்பணி இறைவனின் ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்டும் பணியாகும். அப்பணி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின்

தூதுச் செய்தியை உலகில் பரப்பும் பணியாகும். அப்பணி காலத்தின் இமாமின் ஜமாஅத்தில் இணைந்து உலகிற்கு உண்மையான இஸ்லாத்தை எடுத்துரைக்கும் பணியாகும். இதற்காக உங்கள் உயிர், பொருள்களை தியாகம் செய்யும் சோதனையும் வரலாம். ஆன்மீகரீதியான துன்பங்களையும் சகிக்க வேண்டியது வரலாம். உதாரணமாக, நமக்கு கலிமா சொல்லவும், தொழவும் தடை விதிக்கப்படுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தீய வார்த்தைகளால் வசைபாடப்படுகிறது. பௌதீகமான துன்பங்களோடு ஆன்மீக துன்பங்களும் தரப்படுகின்றன. இவை அனைத்தின் மீதும் நாம் கடந்து செல்ல வேண்டியதுள்ளது. அல்லாஹ் இதன் பக்கம் கவனமூட்டி மனரீதியாக இந்த துன்பங்களை சந்திக்க மூஃமின்களை தயார் செய்கின்றான். பிறகு கூறுகிறான்:

நீங்கள் பொறுமை, தைரியம், துஆவுடன் இந்த தேர்வினை எதிர்கொள்ள முயற்சி செய்வீர்கள் எனில் அல்லாஹ் எப்போதும் உங்களுடன் இருப்பான்.

அவன் அத்தகைய பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். நல்ல முடிவும் அவர்களுக்கே கிடைக்கின்றன. அல்லாஹ்விடத்தில் உயிர் தியாகம் செய்பவர்களின் தகுதி மிக உயர்ந்ததாகும். இறைவன் கூறுகின்றான்:

எதிரிகள் உங்களது வாழ்வை முடிவுக்கு கொண்டு வருவதற்காக உமது உயிரை வாங்கி, மார்க்கரீதியாகவும் உங்களை பலவீனப்படுத்த விரும்புகின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுடன் இருக்கின்றான். அந்த இறைவன் பிரபஞ்சங்களின் இறைவன் ஆவான். ஒருவரை அல்லது சிலரை கொலை செய்வது, ஜமாஅத்தையே மரணிக்கச் செய்து விடாது. மாறாக, அல்லாஹ் இரு உலகின் இறைவன் ஆவான். ஒரு மனிதர் இவ்வுலகில் மரணித்தால் மறு உலகில் உயிரைப் பெறுகிறார். அல்லாஹ் கூறுகிறான். இந்த கொலை ஜமாஅத்தை மரணிக்கச் செய்து விடாது. மாறாக, ஒரு மனிதரின் மரணம் பல மூஃமின்களின் வாழ்வுக்கு அடித்தளமாகி விடுகிறது. ஒரு ஷஹாதத் மூஃமின்களை பயப்பட வைக்காது. மாறாக, அவர்களிடம் ஈமானிய வேகத்தை நிறைத்து விடுகிறது. ஈமான் அடிப்படையில் மூஃமின்களை பல சோம்பல்களிலிருந்து வெளியே கொண்டு வந்து விடுகிறது. பயப்படுவதற்குப் பதில் அவர்கள் நெஞ்சை திறந்து கொண்டு எதிரிகளின் முன் நின்று விடுகின்றனர்.

அறிவற்றவர்களே! ஒருவரைக் கொன்று எங்களை பலவீனமாக்கிவிட்டதாக நினைக்கிறீர்கள். கேளுங்கள். ஒரு மனிதரின் மரணம் எங்களிடம் ஒரு ரூஹை ஊதி விட்டது. எங்களுக்கு ஒரு வாழ்வைத் தந்து விட்டது. எங்கள் தியாகங்களை நிலைநாட்டும் உணர்வைத் தந்து விட்டது. இதனால் எங்களிடம் ஒரு புத்துணர்வு தோன்றி விட்டது. மார்க்கத்திற்காக எல்லா தியாகங்களும் செய்ய நாங்கள் தயாராகி விட்டோம் என்று அறிவிப்பு செய்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் டாக்டர் அப்துல் மன்னான் சித்தீக் சாஹிப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டனர். நான் இதே காட்சியையே கண்டேன். வாய்மொழியாகவும் சரி; எழுத்திலும் சரி என்னிடம் உறுதியளிக்கப்பட்டது. உலகில் எந்த இடத்தில் ஓர் அஹ்மதியின் இரத்தம் சிந்த வேண்டிய தருணம் ஏற்பட்டாலும் அல்லாஹ் எங்களுக்கு வாய்ப்பு தரட்டும். அல்லாஹ்வுக்கு முன் குனிபவர்களை – எல்லா நிலையிலும் அவனது திருப்தியை எதிர்நோக்குகின்றவர்களை மரணபயம் ஒன்றும் செய்யாது என்று எதிரிகளுக்கு காட்டுவதற்காகத்தான் இந்த தியாகத்தின் உணர்வை இறைவன் பீறிட்டு வெளிவரச் செய்தான். ஏனெனில், அத்தகைய மரணித்தவர்களைப் பார்த்து அவர்கள் இறந்தவர்கள் இல்லை. நிரந்தரமான வாழ்வைப் பெறக்கூடியவர்கள் என்று இறைவன் கூறுகின்றான்.

ஆகவே, ஒருபுறம் இறைவழியில் ஷஹீதானவர் தனக்கு பின்னால் நிற்பவர்களின் – மூஃமின்களின் ஈமானில் அதிகரிப்பு ஏற்படுத்தி, அவர்களை உயிரூட்டி விடுகிறார். அவர்களின் தகுதியை உயர்த்த எவர்கள் துஆ செய்கின்றனரோ அவர்களின் அந்த நிரந்தர வாழ்வும், தகுதியும் உயர்ந்து கொண்டே செல்கிறது. அவர்கள் எந்த வேலை செய்தாலும் அதில் இறையருளை பெறுவதுதான் மூஃமின்களின் வாழ்வின் நோக்கமாகும். அல்லாஹ்வுடைய தெளிவான அறிவிப்பும் இந்த விஷயத்தில் இருக்கின்றது.

அல்லாஹ்வின் வழியில் இறந்தவர் இறந்தவரல்ல. மாறாக, உயிருள்ளவர் ஆவார். மிக விரைவாக அவர்கள் நற்கூலியையும், இறைநெருக்கத்தையும் பெற்று விடுகின்றனர். மனிதன் ஒருநாள் மரணித்தே ஆக வேண்டும். ஆனால் இவர்களின் மரணமோ ஒரு உயரிய வாழ்வாகும். மரணிக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் இந்த உயரிய வாழ்வு கிடைக்காது. இடைப்பட்ட காலத்தில் அவர் இங்கு வாழ வேண்டியிருக்கிறது. ஆனால், ஷஹீதைப் பற்றி விரைவாக அவருக்கு உயரிய வாழ்வு கிடைத்து விடுகிறது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் பார்வையில் ஷஹீதிற்கு 6 சிறப்புகள் உள்ளன.

1. அவரது இரத்தத்தின் முதல் துளி விழும்போதே அவர் மன்னிக்கப்பட்டு விடுகின்றார்.
2. ஜன்னத்தில் தனது இருப்பிடத்தை அவர் பார்த்து விடுகின்றார்.
3. கபருடைய வேதனையிலிருந்து அவருக்கு விடுதலை அளிக்கப்படுகிறது.
4. பெரும் நடுக்கத்திலும், பதற்றத்திலும்கூட அவர் அமைதியாக இருப்பார்.
5. அவரது தலையில் ஒரு கிரீடம் வைக்கப்படும். அதன் ஒவ்வொரு பகுதியும் உலகம், அதிலுள்ள எல்லாவற்றைவிடவும் சிறந்ததாக இருக்கும்.
6. அவரது 70 உறவினர்களுக்கு பரிந்துரை செய்ய அவருக்கு உரிமை வழங்கப்படும்.

ஆகவே, இதுவே ஷஹீதுடைய தகுதியாகும்.

அஹ்யா என்பது ஹைய் என்பதன் பன்மையாகும். எவரும் வாழ்வுக்கு இது கூறப்படுவதில்லை. உயரிய வாழ்வுக்கு கூறப்படும். ஆகவே, ஷஹீதுடைய கொலையினால் அந்த உயரிய வாழ்வை அவர் உடனே பெற்று விடுகின்றார். இந்த ஹதீஸிலிருந்து அது தெரிய வருகிறது. இதைப் பெறுவதற்காக ஒவ்வொரு மரணிப்பவரும் இடைப்பட்ட சில நெருக்கடிகளை சந்திக்கின்றார். அவரது ஆன்மீக தகுதிக்கேற்ப அதனை தெளிவாகவோ கடினமாகவோ கடந்து செல்கிறார். எதற்கு கூலி அல்லது பழிவாங்கல் பெறப்பட்டு விட்டதோ அதற்கும் அஹ்யா என்று கூறப்படும்.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்: எதிரிகளிடம் நீங்கள் ஒருவரை கொன்று விட்டு நாம் பெரிய நன்மை செய்து விட்டோம் என்று கருதுகிறீர்கள். ஜமாஅத்தைப் பலவீனப்படுத்தி விட்டதாக கருதுகிறீர்கள். ஆனால், நினைவில் கொள்ளுங்கள். மரணிப்பவர் ஷஹாதத்தின் தகுதியைப் பெற்று இறை நெருக்கத்தைப் பெற்று விட்டார். ஆனால் அவரது ஷஹாதத் பழிவாங்காமல் போகாது. ஆகவே நன்றாக கேளுங்கள். சமுதாயத்திற்காக சிந்தப்பட்ட இரத்தத்தை இலேசாக நினைக்காதீர்கள். (18:23)

இன்றும் அல்லாஹ் ஷஹீதுகளின் ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும் பழிவாங்குவான் - இன்-ா அல்லாஹ். வலாகின் தஷ்வுரூன் - உலகவாசிகள் அதனைப் புரிய முடியாது. உமது அறிவு தறிகெட்டுப் போய் இருக்கிறது. அல்லாஹ்வுடைய வார்த்தையைப் படித்திருந்தும் தம்மைத்தாமே முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டிருந்த போதிலும் இத்தகைய செயல்களை செய்து இறைவனது கோபத்தை தூண்டுகின்றனர்.

இறைவன் ஓரிடத்தில் கூறுகின்றான்: ஒரு மனிதர் காரணமின்றி ஒரு மூஃமினை கொலை செய்வார் என்றால், அவருக்கு தண்டனையாக நரகம் கிடைக்கும். அதில் அவர் நீண்டகாலம் இருப்பார். அல்லாஹ் அவர் மீது கோபம் கொள்வான். அவருக்காக இறைவன் பெரிய தண்டனையை தயார் செய்வான். மூஃமினைப் பற்றிய இலக்கணத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத், இன்னொரு அன்சாரி இருவரும் சேர்ந்து ஓரிடத்தில் ஒரு காஃபிரை போரில் எதிர்கொண்டனர். அம்மனிதரை வெற்றி கொண்டனர். அந்நிலையில் அவர் கலிமா சொன்னார். எனது அன்சாரி நண்பர் ஒன்றும் செய்யாமல் நின்று விட்டார். நான் அவரை கொன்று விட்டேன் என்று உஸாமா கூறினார். நாங்கள் போரிலிருந்து திரும்பும் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இதுபற்றி கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கலிமா தவ்ஹீது கூறிய பிறகுமா

நீர் அவரை கொலை செய்தீர்? லாயிலாஹ இல்லல்லாஹ் சொன்ன பிறகுமா நீர் அவரை கொன்றீர்? மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உடனே நான் (உஸாமா) அல்லாஹ்வின் தூதர் அவர்களே! வாள் முனையின் பயத்தால் அவர் கலிமா சென்னார் என்று கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம், அவர் உள்ளத்தால் கலிமா சொன்னாரா? அல்லது வாள் மீதுள்ள பயத்தால் சொன்னாரா? என்று நீர் அவரது உள்ளத்தை பிளந்தா பார்த்தீர்? என்று கேட்டார்கள். இதனைக் கேட்ட நான் இன்றைக்கு முன் நான் முஸ்லிமாக இல்லாமல் இருந்திருக்கலாமே என்று நினைத்தேன் என்று உஸாமா பின் ஸைத் கூறியதாக அறிவிப்பில் வருகிறது.

ஒரு அறிவிப்பில் அபி மாலிக் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக்கேட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று உறுதி கொண்டு, அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகிற அனைத்தையும் மறுத்து விட்டார் எனில் அவரது உயிரும் பொருளும் கண்ணியத்திற்குரியதாகும். மற்ற அவரது கணக்குகள் அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளன.

இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் முஸ்லிம்களுக்கு தவறான முறையில் நம்மைப் பற்றி புரிய வைக்கிறார்கள். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வின் ஒரு பகுதியைத்தான் அஹ்மதிகள் ஈமான் கொண்டுள்ளனர். லாயிலாஹ இல்லல்லாஹ்வை கூறுகின்றனர். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதில்லை. அதனை மறுக்கின்றனர். எனவே அவர்கள் கொலை செய்யத் தகுந்தவர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் நமது உள்ளத்தை பிளந்து பார்த்தார்களா? நமது உள்ளத்தில் என்ன இருக்கிறது? என்று இவர்கள் எப்படி தெரிந்தனர்? காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குப் புரிய வைத்திருப்பதில் கோடியில் ஒரு பங்கு கூட இந்த மவ்லவிகளுக்கு கிடையாது. நாம் காத்தமுன்னபிய்யீன் என்று ஏற்கவில்லையாம்! எனவே நாம் கொலை செய்யத் தகுதி படைத்தவர்களாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த அந்தஸ்த்தில் நமக்கு கத்மே நுபுவ்வத் பற்றி புரிய வைத்துள்ளார்கள்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு உண்மையின் சூரியனாக விளங்கினார்கள். எந்த அளவுக்கு ஒளியை மக்களிடம் பரப்பினார்கள். அவரைப் பின்பற்றுவது ஒரு மூஃமினை முழுமையடையச் செய்கிறது. ஒருவரை ஆரிப் உடைய தகுதிக்கு சென்றடைய வைக்கிறது. ஒருவருக்கு ஹிஜ்ஜத்துல்லாஹ் ஆயத்துல்லாஹ் (அல்லாஹ்வின் சான்று) என்ற தகுதிக்கு கொண்டு செல்ல வைக்கிறது. முஹம்மதே இலாஹிய்யா என்ற பதவிக்கு உயர்த்துகிறது.

அம்மனிதர் இன்ஸானே காமில் (முழுமையான மனிதர்) ஆக இருந்தார்கள். காமில் நபி (முழுமையான நபி) முழுமையான அருளோடு வந்தார்கள். அவரது ஆன்மீக ஈர்ப்புசக்தியின் ஒன்றுதிரட்டலால் உலகில் முதல் கியாமத்தே வெளிப்பட்டது. காலகாலமாய் மரித்துக் கிடந்தவர்கள் அவரால் உயிர் பெற்றனர். அந்த அருளுக்குரிய நபி காத்தமுல் அன்பியா, இமாமுல் அஷ்பியா, கத்முல் முர்ஸலீன், ஃபக்ருன்னபிய்யீன் ஜனாப் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். என் இறைவா! அந்த அன்பிற்குரிய நபியின் மீது தரூதையும், ரஹ்மத்தையும் அனுப்புவாயாக. உலகில் ஆரம்பத்திலிருந்து எவருக்கும் அனுப்பாக தரூதையும், ரஹ்மத்தையும் அவருக்கு அனுப்புவாயாக. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் நாம் இறை அறிவிப்பு, ரூஹுல் குத்ஸ் மற்றும் வானத்தின் அடையாளங்கள் ஆகிய வெகுமதிகளைப் பெற்றோம்.

ஆகவே, இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் ஆகும்.

இந்த குழப்பவாதிகளான இக்கால பெயர்தாங்கி உலமாக்கள் நம்மைப் பார்த்து, இந்த அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கடைசி நபி என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுகின்றனர்.

எனவே அவர்கள் இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியேறி விட்டனர். இவர்கள் கொலை செய்யப்பட வேண்டியவர்கள் என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

எந்த வேலையை இவர்கள் செய்கின்றார்களோ, அந்த வேலையை செய்வதற்கு இவர்களுக்கு அல்லாஹ்வும் அனுமதி தரவில்லை. அல்லாஹ்வுடைய ரஸுலும் அனுமதி தரவில்லை. ஆனால் அந்த நபியின் பெயரால் இந்த அநீதியிழைக்கப்படுகிறது. எனவே நாம் அந்த ரஸுலைப் பின்பற்றி வெகுமதிகளை பெறுபவர்களாவோம். இப்போதும்கூட நீங்கள் அஹ்மதிகளுக்கு எதிரான குழப்பங்களில இருந்து திரும்பி விடுங்கள். நினைவில் கொள்ளுங்கள். நான் அவர்களுக்கு காலக்கெடு வழங்குகிறேன். (ஏனென்றால்) எனது திட்டம் மிக வலுவானது (68:46) என்ற அடையாளம் முன்னர் வெளிப்பட்டது போன்று இன்றும் வெளிப்படும்.

ஆகவே, அல்லாஹ்வுக்கு உங்களுடைய சூழ்ச்சி தெரியாது என்று நினைக்காதீர்கள். ஆம், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியவர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பணியை தொடரச் செய்வதற்காக அவர்களின் அடிமையாக, அவர்களின் நபியாக ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள். எனவே, இறைவனின் தீர்ப்பு வரும்வரை அவர்கள் உங்களது அநீதிகளை பொறுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த போதனையை இக்காலத்தின் இமாம் நமக்கு தந்துள்ளார்கள். இதனையே அல்லாஹ் நமக்கு கூறியுள்ளான்.

பயம், பசி, உயிர், பொருள், நஷ்டம் கொண்டு இறைவன் உங்களை சோதிப்பான். நீங்கள் சோதனையிலிருந்து வெளி வந்தீர்கள் எனில் நற்செய்தி கொடுக்கப்பட்ட பொறுமையாளர்களின் கூட்டத்தில் இணைவீர்கள். இறைவன் நற்செய்தி கூறுகிற அந்த பொறுமையாளர்களுடன் சேருங்கள். ஆகவே, அல்லாஹ்வின் நற்செய்தி நம்முடன் உள்ளது. உலக நஷ்டங்கள் நம்மை என்ன செய்துவிட முடியும். இந்த துன்பங்கள் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு காரணமாக இருக்கின்ற அதே வேளையில் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. அஹ்மதியாகிய நாம் இந்த துன்பங்களால் பதற்றமடையக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான். உங்கள் ஈமானில் உறுதியாக நிலை நில்லுங்கள். எப்போது பிரச்சனைகள் வந்தாலும் ஒப்பற்ற பொறுமையுடன் உங்கள் வாயிலிருந்து இதே வார்த்தைதான் வர வேண்டும். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் – நாம் நிச்சயமாக அல்லாஹ்விற்கே உரியவர்கள். அவனிடமே செல்லவிருக்கிறோம்.

நாம் இவ்வாறு கூறுவோம் என்றால் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தையும், பரக்கத்தையும் நெருங்குபவர்களாவோம். எப்போதும் ஹிதாயத்தில் நிலைநின்றால் ஈமானில் உறுதிப்பாடு உருவாகும். பிறகு கடைசி வெற்றியை பார்ப்பவர்களாவோம். இன்ஷா அல்லாஹ்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுடைய வெகுமதிகள் நிலைத்து நிற்பவர்களுக்கு கிடைக்கின்றது. எனவே நமது பொறுமை, நிலைத்து நிற்றல்தான் **இன்னா பதஹ்னா லக ஃபத்ஹன் முபினா** – நிச்சயமாக உமக்கு தெளிவான வெற்றியைத் தந்தோம் என்ற நற்செய்தியைக் கொண்டு வரும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டதனால் நமக்கு எதிர்ப்பு வருகிறது. நமக்கு துன்பம் தரப்படுகிறது. ஏன்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டதனால் நமது பொருள்களுக்கு நஷ்டம் விளைவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதனால் நமது அன்பிற்குரியவர்கள் கொலை செய்யப்படுகின்றனர். எனவே நாம் நிலைத்து நின்றால் சோதனைகளை வெற்றியுடன் கடப்போம். பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு உரிமையாளராவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் இறைவன் பலமுறை அறிவித்தான். **இன்னா ஃபதஹ்னா லக ஃபத்ஹன் முபினா** உமக்கு தெளிவான ஒரு வெற்றியைத் தந்தோம்.

நாம் மகத்தான வெற்றியை தருவோம். அது தெளிவான வெற்றியாக இருக்கும். எனவே சமுதாயங்களின் வாழ்வு சோதனைகள் துன்பங்கள் மூலம் இறைவனது ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக

வருகிறது. அடையாளங்கள் வெளிப்படுவதற்காக வருகிறது. எனவே, பொறுமை, துஆவுடன் அவனிடம் உதவி கேட்டுக் கொண்டே செல்லுங்கள்.

இந்த ஷஹாதத்துகளின் பின்னாலும் **ஃபதஹ்னா லக ஃபதஹ்னா முபினா** – வின் குரல்தான் வருகிறது.

இறைவன் எதிரிகளுக்கு ஒருபோதும் மகிழ்ச்சி தரப்போவதில்லை. அவர்களது மகிழ்ச்சிகள் மிகவும் தற்காலிகமானவை. எந்தவொரு அஹ்மதி ஷஹீதாக்கப்பட்டாலும் அந்த இரத்தம் நன்மையைக் கொண்டு வரும். இப்போதும் அப்படியே நடக்கும். எதிரிகள் பிடிக்கப்படுகின்ற காட்சியை நாம் முன்னரும் பார்த்தோம். இப்போதும் அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ்வின் வார்த்தைகளே நமக்கு ஆறுதல் தருகின்றன. **வஅஃதஹுமுல்லாஹி பிஸுனூபிஹிம் வமா னமில்லாஹி மின்வாக்** – அல்லாஹ் அவர்களை அவர்களின் பாவத்தின் காரணத்தால் பிடித்தான். அத்தகையோரை இறை பிடியில் இருந்து காப்பாற்றுவர் எவரும் இருந்ததில்லை. எனவே சென்ற காலத்தில் பிடித்த அதே இறைவன் இன்றும் இருக்கிறான். உயிருள்ள இறைவன் நமது இறைவன். படிப்பினையூட்டும் முடிவை அவர்களுக்கு தருவான்.

எனவே அல்லாஹ் நமது அன்பிற்குரிய இறைவன் உண்மையான வாக்குறுதி தருபவன். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் அந்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவான். நாம் நிறைவேறுவதைக் கண்டே வருகிறோம். அல்லாஹ் மூஃமின்களின் ஆறுதலுக்காக கூறுகிறான். ஒரு விஷயத்தை பலமுறை திரும்பத் திரும்ப கூறுகிறான். இன்ஷா அல்லாஹ் வருங்காலத்திலும் காட்டியே வருவான். எனவே நமது பணி ஈமானில் உறுதியாக நிலைநிற்க வேண்டும். நமது சகோதரர்களின் சிறப்புகளை ஒருபோதும் மரணிக்கவிட்டு விடாதீர்கள். அவர்கள் ஜமாஅத்திற்கு உயரிய முன்மாதிரியைக் காட்டியவாறு தனது உயிர்களை இறைவழியில் தந்துள்ளார்கள். இப்போது சமீபத்தில ஷஹீதாக்கப்பட்டவர்களைப் பற்றி இப்போது நான் சுருக்கமாக கூறப்போகின்றேன்.

**முதல் ஷஹீத் நமது அன்பிற்குரிய சகோதரர் அப்துல் மன்னான் சித்திகி சாஹிப்.**

அவர்களது ஷஹாதத் 27 மே 2008 க்குப் பிறகு நடந்த முதல் ஷஹாதத் ஆகும். அதாவது இந்த மகத்தான ஷஹீத் தனது உயிரை இறைவழியில் தந்து ஒரு விஷயத்தை நிரூபித்துள்ளார். அதாவது கிலாஃபத்தே அஹ்மதிய்யாவின் இரண்டாவது நூற்றாண்டிலும் கூட ஜமாஅத்திற்காக உயிரைவிட நாங்கள் தயாராக இருக்கிறோம். எமது ஈமான் கடந்த நூற்றாண்டுகளில் ஜமாஅத்திற்காக தியாகம் செய்தவர்களின் ஈமானைப் போன்று இப்போதும் உறுதியாகவே இருக்கிறது. இந்த ஷஹீதின் வயது 46 தான். தமது இளமைக் காலத்து ஷஹாதத் மூலம் இளைஞர்களுக்கு ஒரு பாடத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

எங்கள் உயிர் போனால் போகட்டும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தை கைநழுவ விடக்கூடாது. கிலாஃபத்தே அஹ்மதிய்யாவுக்காக எந்த தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும்.

டாக்டர் அப்துல் மன்னான் ஸித்தீக் சாஹிப் நல்லியல்பு கொண்டவர். தூய்மை, விசுவாசம் உள்ளவர். எனக்கு தனிப்பட்ட முறையிலும் அவரோடு தொடர்பு உண்டு. பிறகு நாஸிர் அஃலா என்ற முறையில் முன்னரும் அவருடன் எனக்கு பழைய தொடர்பு உண்டு. எனது குடும்பத்தோடும் அவரது குடும்பத்திற்கு தொடர்பு உண்டு என்று கூற வேண்டும். அவரது தந்தை ரப்வா வரும்போதெல்லாம் எனது தந்தையை சந்திக்க வருவார். எமது வீட்டில் பெரிய சபை நடக்கும். ஜமாஅத்தின் பிரச்சனைகள் நீண்ட நேரம் வரை விவாதிக்கப்படும். இவரது தந்தையர் டாக்டர் அப்துர் ரஹ்மான் சித்திகி சாஹிப் ஆவார். அவருக்கும் ஜமாஅத்துடன் நல்ல ஆழிய தொடர்பு இருந்தது. கிலாஃபத்துடன் விசுவாசமாக இருந்தவர். அதனை இப்போது கூறுகிறேன். அவர் 40 ஆண்டுகள் வரை ஹைதராபாத்தில் இருந்தார். பாகிஸ்தான் பிரிந்தபோது ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தான் வந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் தமது எதிர்காலம் குறித்து வழிகாட்டல் வழங்குமாறு கேட்டார். உடனே, மிர்பூஷ்காஷ் சென்று வாழுங்கள் என்று இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அங்கு உங்களுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். உடனே அவர் எந்த தயக்கமும் இன்றி அங்கு சென்று அமர்ந்து விட்டார். மிகவும் தூய்மையான முறையில் ஜமாஅத்திற்கு சேவை செய்து வந்தார்.

டாக்டர் அப்துல் மன்னான் சித்தீக் சாஹிப் ஷஹீத் அவர்கள் டாக்டர், அப்துர் ரஹ்மான் திருமணம் செய்து 11 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார். சிந்துவிலுள்ள Medical College-ல் MBBS படித்தார். பிறகு 1988 -ல் அமெரிக்கா சென்றார். அங்கு Ultra Sonic Training செய்தார். பிறகு இன்னொரு படிப்பு படித்தார். American Board of Medical சான்றிதழைப் பெற்றார். படித்த பிறகு அங்கு வேலை செய்ய திட்டமிட்டார். ஆனால் அவரது தந்தைக்கு மகன் அமெரிக்காவிலேயே தங்க முடிவு செய்துள்ளார் என்று தெரிந்ததும் மகனுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்.

இந்த பகுதியில் மருத்துவ சேவை செய்வதற்காகத்தான் நான் உம்மை டாக்டருக்கு படிக்க வைத்தேன். இங்கு இருந்து கொண்டு இங்குள்ள மக்களுக்கு சேவை செய்யுமாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள் இந்த ஏழை மக்களுக்கு சிகிச்சை அளிக்கவே உம்மை படிக்க வைத்தேன். நீர் இங்கு இருந்து கொண்டு சேவை செய்ய வேண்டும். இதுவே எனது விருப்பமாகும்.

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அமெரிக்காவை விட்டு விட்டு உடனே மிர்புஷ்காஷ் திரும்பினார். இங்கு பணி செய்யத் தொடங்கினார்.

டாக்டர் மன்னான் சித்தீக் சாஹிபின் தாயாரின் தந்தையார் பெயர் டாக்டர் இஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஆவார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். அவரது தாயார் உயிருடன் இருக்கின்றார். அவரது பெயர் சலிமா பேகம் சாஹிபா ஆவார். நல்ல தூய்மையும், மென்மையும் கொண்டவர். ஏழைகளிடம் இரக்க உணரவு கொண்டவர். 37 வருடம் மிர்புஷ்காஷ் லஜ்னா தலைவியாக இருந்தார். தர்பிய்யத் வழங்கினார். லஜ்னாவுக்கு மிகவும் சேவை செய்தவர். தனது வயது முதிர்ந்த நிலையிலும் தனது மகனின் மரணச் செய்தியைச் சொன்னதும் மிகவும் தைரியத்துடன் ஏற்றுக் கொண்டார். அவரது தாயாருக்கு பெரும் அதிர்ச்சிதான். அவருக்கு அல்லாஹ் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக!

டாக்டர் மன்னான் சித்திக் சாஹிப் அவர்களுக்கு ஜமாஅத்தின் பல்வேறு பிரிவுகளில் ஜமாஅத் பணிகளை மேற்கொண்டார். 1997 -லிருந்து மரணம் வரை அமீராக இருந்தார். இது அல்லாமல் உமூரே ஆமா செயலராகவும், குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் பணியாற்றினார். 1998 ஆம் ஆண்டு தனது தந்தையார் வஃபாஅத் ஆன பிறகு தமது மருத்துவமனையை அவரே பராமரித்தார். அந்த மருத்துவமனையில் எல்லா வசதிகளும் உள்ளன. பார்க்கர் என்ற நகரில் ஏழை மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அங்கு இலவச மெடிக்கல் கேம்ப் நடத்தி ஏழைகள், அனாதைகளுக்கு சிசிச்சை அளித்து வந்தார். ஆயிரக்கணக்கான நோயாளிகள் அவரது கைகளால் குணம் பெற்றனர். அவரது வஃபாத்தின் போது ஏழை மக்கள், பணக்காரர்கள் அனைவரும் பார்க்க வந்திருந்தனர். அல்லாஹ் இந்த மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அடிமையின் கையில் பெரும் மருத்துவ குணத்தை வைத்திருந்தான். ஏழைகளுக்கு இவர் மூலம் சிகிச்சை வழங்கினான். மிர்புஷ்காஷ் பகுதி மட்டுமின்றி அந்த மாநிலம் முழுவதும் இந்த இளம் வயதிலேயே நல்ல பெயர் இவருக்கு இருந்தது. இதனை அஹ்மதிகள், அஹ்மதி அல்லாதவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இவருக்கு தஃவத்தே இலல்லாஹ், தப்லீக் பணிகளில் ஆர்வம் இருந்தது. பல்வேறு குழுக்களை தலைமையகத்திற்கு தப்லீகிற்காக அழைத்தும் வருவார். தமது கண்காணிப்பில் பல குழுக்களை தப்லீகிற்காக அனுப்பவும் செய்வார். கடந்த 5 வருடமாக தஃவத்தே இலல்லாஹ்வின் பணி தொடர்ந்து அவரது பகுதியில் நடந்து வருவதை நான் பார்க்கிறேன். துஆவிற்காக கடிதம் எழுதுவார். அல்லாஹ் எப்போதும் அவரது தப்லீகில் வெற்றியை வழங்கி வந்தான். எதிரிகளின் எதிர்ப்புக்கு மிகப்பெரிய காரணம் அவரது தஃவத்தே இலல்லாஹ் பணி தான். ஏனெனில் எல்லா தரப்பு மக்களையும் சந்தித்து தப்லீக் செய்து வந்தார். எதிரிகள் அவரை கொன்று தப்லீக் பணியை நிறுத்த விரும்பினர். ஆனால் அறிவற்றவர்கள் அறிவதில்லை. டாக்டர் அப்துல் மன்னான் சாஹிப் இறைவன் முன் தன் உயிரை வழங்கியதன் மூலம் பல அப்துல் மன்னான்களை இறைவன் உருவாக்குவான் இன்ஷா அல்லாஹ்.

டாக்டர் சாஹிபின் திருமணம் டாக்டர் மஹ்மூத் சாஹிபா அவர்களுடன் நடந்தது. அவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்தவர். இரு குழந்தைகள் உள்ளனர். மூத்த பெண்ணின் வயது 18. பையனுக்கு வயது 13. அவரது மனைவியும் சதர் லஜ்னாவாக இருந்தார்.

வக்ஃபே ஜதீதின் மருத்துவமனை பார்க்கர் நகரிலுள்ள மிட்டி என்ற பகுதியில் உள்ளது. அங்கும் அவர் நல்ல சேவை செய்து வந்துள்ளார். இலவச மருத்துவ முகாம் நடத்தினார். மனிதநேய சேவைக்காக உருவாக்கப்பட்ட அந்நூர் சொசைட்டியின் தலைவராகவும், சதர் அஞ்சுமன் திட்டக்குழுவின் உறுப்பினராகவும், தஹ்ரீகே ஜதீதிலும் அவர் பொறுப்பு வகித்தார்.

நான் ஏற்கனவே கூறியது போன்று எனக்கு அவருடன் பழைய தொடர்பு இருந்தது. அவரது தந்தைக்கு எனது தந்தையுடன் தொடர்பு இருந்தது. டாக்டர் அஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மருத்துவர். அவர் டாக்டர் அப்துல் மன்னான் சாஹிபின் நானா ஆவார். ஒரு குடும்பத் தொடர்பு எங்களுக்குள் இருந்தது.

டாக்டர் மன்னான் சாஹிபின் முகத்தில் ஒருபோதும் பதற்றம் இருக்காது. அத்தகைய இயல்பு கொண்டவர்களுள் ஒருவராக அவர் இருந்தார். மிர்புர்காஷ் பகுதி கடந்த சில வருடங்களாக மவ்லவிகளால் குறி வைக்கப்பட்டிருந்தது. இருந்தும் மிக உன்னதான முறையில் அந்த ஊரில் ஜமாஅத்தை வழி நடத்திச் சென்றார். அது மட்டுமின்றி மற்றவர்களோடு நல்ல தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். தமது அந்த செல்வாக்கை தமது சொந்த வேலைக்காக பயன்படுத்தியதில்லை. ஜமாஅத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வந்தார். இரவும் பகலும் யார் எப்போது உதவிக்காக அழைத்தாலும் சிரித்த முகத்துடன் உதவிக்கு செல்வார். அவரது முகத்தில் எப்போதும் புன்னகை காணப்படும். நான் மட்டும் கூறவில்லை. பலர் இதனைக் கூறுகின்றனர். எளிமை அளவுகடந்து இருந்தது. நான் அமெரிக்காவில் படித்தவன் என்ற எந்த பெருமையும் அவரிடம் இருந்ததில்லை. நான் இந்தப் பகுதியின் அமீர், மர்கஸ் கமிட்டி உறுப்பினர் என்ற பெருமை இருந்ததில்லை. பொதுவாக செல்வந்தர்கள் மருத்துவ முகாம் போன்ற இடங்களுக்கு தாமே நேரடியாக செல்வதில்லை. ஆனால் டாக்டர் மன்னான் சாஹிப் அவர்கள் ஜமாஅத் வேலை எதுவும் இல்லாதபட்சத்தில் தாமே நேரடியாக சென்று விடுவார்கள்.

அவர் ஏழைகளுக்கு சிகிச்சை செய்வது மட்டுமின்றி தன்னிடமிருந்து ஏதாவது கொடுத்து அனுப்பும் வழக்கமும் இருந்தது. அவரது வஃபாத்திற்கு பெரும் செல்வந்தர்கள் இரங்கல் தெரிவிக்க வந்தனர். பல ஏழைப் பெண்களும் கூட மிகவும் வியத்தகு முறையில் டாக்டர் சாஹிபைக் குறித்து புகழ்ந்து பேசினர். அவருக்கு கிலாஃபத்துடன் விசுவாசம், தொடர்பு அளவு கடந்தது. அவரது தந்தையும் கிலாஃபத்துடன் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். எனது மிகச்சிறந்த நண்பர்களுள் அவரும் ஒருவர். அவரிடம் எனக்கு பெரும் நம்பிக்கை இருந்தது. அவரது எந்த ரிப்போர்ட்டும் என்னிடம் வரும்போது இதில் நீதிக்குப் புறம்பான தகவல் இருக்குமோ என்ற எண்ணம்கூட எழுந்ததில்லை. அல்லது தக்வாவுக்கு மாற்றமான கருத்து எதையும் எழுதியிருப்பாரோ என்ற எண்ணமும் வந்ததில்லை. மிக உயர்ந்த முத்தகியாக அவர்கள் இருந்தார்கள் பல மிரட்டல்கள் அவருக்கு வந்து கொண்டிருந்தபோதிலும் எந்த பயமும் இன்றி பணி செய்தார். சில நாட்களுக்க முன்புகூட அவருக்கு கவனமூட்டப்பட்டது. கொஞ்சம் கவனமாக இருங்கள் என்று அறிவுறுத்தப்பட்டது. எது நடக்குமோ அது நடந்தே தீரும் என்ற அவற்றை ஒதுக்கி விட்டார்.

ஜமாஅத்தின் சிறந்த சேவையாளரான அவரது தகுதியை அல்லாஹ் உயர்த்திக் கொண்டே செல்வானாக. அவர் ஷஹீதாகி உயர் தகுதியைப் பெற்று விட்டார். அவரது தகுதியை அல்லாஹ் உயர்த்திக் கொண்டே செல்வானாக. அவரது மனைவிக்கும் பொறுமையையும், தைரியத்தையும் இறைவன் வழங்குவானாக. அவர் மிகவும் தைரியத்துடன் தனது கணவரின் மரணச் செய்தியை கூறினார். மிகச் சிறந்த பொறுமை செய்தார். அவரது குழந்தைகளையும் கவனித்துக் கொண்டார். அமெரிக்காவில் படித்து வளர்ந்திருந்த போதிலும் கணவருடன் மிகவும் விசுவாசத்துடன் நடந்து கொண்டார். ஜமாஅத் வேலைகளில் தனது கணவரைத் தடுத்ததில்லை. மாறாக, அவரும் நல்ல சேவைகள் செய்து வந்தார். அவருக்கு அல்லாஹ் நீண்ட வாழ்வைத் தந்து குழந்தைகளுக்கு மகிழ்ச்சி தருவானாக. டாக்டர் சாஹிப் அவர்களின் மரணம் குறித்து ஜமாஅத்திற்கு வெளியிலும் பலர் தனது இரங்கலை தெரிவித்தனர். சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன்.

முதலில் MQMK அல்தாப் சாஹிப் இங்கு இலண்டனில் வசிக்கிறார். அவர் இவ்வாறு கூறுகிறார். டாக்டர் அப்துல் மன்னான் சித்திகி சாஹிபுடைய படுகொலை மிர்புஷ்காஷ் நகரைச் சார்ந்தவர்களுக்கு

பேரிழப்பாகும். எந்த மொழி, நிறம், மதம், இனபேதமின்றி ஆயிரக்கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடியவராக இருந்தார். இவரைக் கொன்றவர்கள் தமது இச்செயல் மூலம் தாம் முஸ்லிமாக இருப்பது ஒருபுறம் இருக்கட்டும். தான் மனிதனாகக்கூட இல்லை என்று நிரூபித்துள்ளனர். டாக்டர் அப்துல் மன்னான் சாஹிப் அவர்களை காட்டுமிராண்டித்தனமாக கொன்றவர்களை கண்டித்தவாறு கூறினார். இவரை கொன்றவர்கள் மிகவும் சுயநலமிக்கவர்கள். அப்பாவி மக்களை கொலை செய்கின்றனர். இவர்கள் மனித குலத்திற்கே பெரிய எதிரிகளாக உள்ளனர்.

பிறகு பாகிஸ்தான் Medical Institution உடைய தலைவர் இவ்வாறு கூறுகிறார்.

டாக்டர் மன்னான் உடைய கொலை மனிதநேயத்திற்கு எதிரான கொலையாகும். இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் பெரிய நற்காரியம் செய்வதாக கருதுகின்றனர். இவர்கள் தம்மை திருக்குர்ஆன் தெரிந்த ஆலிம் என்று கருதுகின்றனர். இவர்கள் புரிவதில்லை. இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். காரணமில்லாமல் ஒருவரை கொல்வது அதாவது எவரையும் கொலை செய்யாத ஒருவரை கொலை செய்வது அல்லது நாட்டில் குழப்பம் செய்யாத ஒருவரை கொலை செய்வது எல்லா மனிதர்களையும் கொலை செய்வதற்கு சமமாகும். டாக்டர் சாஹிபுடைய நிலை அத்தகையதாகும். மனித குலத்திற்கு ஒவ்வொரு நொடியும் சேவை செய்து கொண்டிருந்தார். மற்றவர்கள் கூட அதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிறகு இன்னும் அதிகமான டாக்டர்களுடைய குழு இணைந்து இவ்வாறு கூறியுள்ளனர். டாக்டர் சாஹிப் எமது மிகவும் அன்பிற்குரியவர். மகத்தான மனிதர். இவரது கொலை ஒரு சமூகக் கொலை. ஒரு மலக்கு போன்ற மனிதர் நூறாண்டுகளில் கூட பிறப்பதில்லை. பிறகு பல்வேறு துறையின் பொறுப்பாளர்கள் கூறியுள்ளனர். அவர்களது பெயரை இங்கு கூற இயலாது. அவரது மரணம் அவரது ஜமாஅத்திற்கு மட்டும் நஷ்டமல்ல. மாறாக, நம் அனைவருக்கும் நஷ்டமாகும்.

இன்னொரு பிரிவின் பொறுப்பாளர் கூறுகின்றார். இவர் ஏழைகளுக்கு மிகவும் அனுதாபம் காட்டக் கூடியவர். உதவியற்றவருக்கு உதவி செய்யக்கூடியவர். எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் மக்கள் உள்ளங்ளை ஈர்ப்பவர். அவரது நல்லொழுக்கத்தின் சிறப்பு விவரிக்க இயலாதது.

பிறகு இன்னொருவர் இவ்வாறு கூறுகிறார். மிர்புர்காஷ் நகரம் ஒரு சிறந்த டாக்டரை இழந்து விட்டது. மிகப்பெரும் அநீதி நடந்துள்ளது. புதிதாக பைஅத் செய்தவர்கள் கூறுகின்றனர். டாக்டர் சாஹிப் ஏழைகள் மீது மிகவும் அனுதாபம் கொண்டவர். எம்மை அநாதையாக்கி விட்டுப் போய் விட்டார். அவரது மருத்துவமனை தாக்கப்பட்டுள்ளது. எம்மை குழந்தைகளைப் போன்று கவனித்து வந்தார். ஏழைகளை சிறப்பாக பராமரிப்பவர். பிறகு அரசு அதிகாரிகள் D.S.P., D.P.O., D.I.G போன்றவர்களும் தமது அனுதாபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஷஹீதுடன் எங்களுக்கு தனிப்பட்ட தொடர்பு உண்டு. அன்னார் மகத்தான மனிதர் ஆவார்.

ஒரு பிரபல அரசியல்வாதி கூறுகிறார். டாக்டர் மன்னான் சித்திகி உடைய கொலை ஒரு தனிநபர் கொலை அல்ல. முழு மிர்புர்காஷ் நகரத்தின் கொலை ஆகும்.

**நமது இரண்டாவது ஷஹீத் சேட் முஹம்மத் யூசுப் சாஹிப்.** இவரும் ஜமாஅத்தின் அமீர் ஆக இருந்தவர். ஸில்லா நவாப் ஷாவின் அமீர் ஆவார். அதிகம் படித்தவர் இல்லை. ஆனால் மிகவும் களங்கமற்ற விசுவாசம், தொண்டு செய்யும் ஆர்வம் உள்ளவர். இவர் 1956 -ல் நவாப் ஷாவில் குடியேறினார். 1962 -ல் நவாப் ஷா ஜமாஅத்தின் சதர் ஆனார். அவரது தலைமையில் அங்கு மஹ்மூத் ஹால் உருவாக்கப்பட்டது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அந்த ஹாலுக்கு மஹ்மூத் ஹால் என்று பெயர் வைத்தார்கள். இரண்டு ஆண்டுகள் மாவட்ட காயிதாகவும் இருந்தார். பிறகு 1993 -ல் நவாப்ஷாவின் அமீர் ஆனார். சந்திக்க எளிமையானவர். அவர் மரணம் அடையும் வரை அதே பொறுப்பில்தான் இருந்தார். நல்ல விருந்தோம்பல் செய்பவர். ஏழைகளை குறிப்பாக கவனித்துக் கொள்பவர். எப்போதும் ஸலாமுக்கு முந்திக் கொள்பவர். யாருடைய உள்ளமும் புண்படாமல் நடக்க விரும்புபவர். வாழ்வை அர்ப்பணித்தவர்களை கண்ணியப்படுத்துபவர். அவர்களது தேவைகளை குறிப்பாக கருத்தில் கொள்வார். அல்லாஹ்வின் அருளால் சேட் சாஹிப் மூஸி (வஸிய்யத் செய்தவர்) யாக இருந்தார்.

நவாப் ஷாவில் இன்னொரு ஒரு பெரிய பள்ளியும், ஹாலும் கூட அவர் அமீராக இருந்து உருவாக்கினார். அதற்கு அய்வானே தாஹிர் என்று பெயர். இதய நோயாளி. இருந்தும் நல்ல உழைப்பாளி. எனக்கு வந்த கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. அவரது வீடு கட்டிடத்தின் இன்னொரு பகுதியில் இருந்தது. கீழே கடைகள் இருந்தன. இவர் மாடிப்படி ஏறுவதை, இறங்குவதை டாக்டர் கூடாது என்று தடுத்திருந்தார். ஜமாஅத் பணிகளைச் செய்யாமல் வீட்டில் உட்கார முடியாது. இவரது வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் பள்ளி இருந்தது. பாகிஸ்தானில் LIFT போன்ற வசதிகள் கிடையாது. இலண்டனில் இருப்பது போன்று Automatic Chair, Electronic Chair -கள் ஏணிப்படியுடன் இணைக்கப்பட்டிருப்பது போன்ற வசதிகள் அங்கு கிடையாது. எனவே ஒரு நாற்காலியில் அவர் உட்கார்ந்து விடுவார். அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கயிறுகளால் வீட்டினர் அவரை கீழே இறக்கி விடுவர். மாலையில் அந்த சேரில் உட்கார்ந்ததும் பணியாளர் அல்லது வீட்டினர் கயிறுகளை மேலே இழுத்து அவரை மேலே கொண்டு வருவர். இவ்வாறு பகல் முழுவதும் ஜமாஅத் வேலைகளைச் செய்வார். இதுதான் ஜமாஅத்திற்கு வேலை செய்யும் தொண்டரின் நிலையாகும். ஷஹீத் எப்போது சென்றாலும் ஒரு தூதுச் செய்தியைத் தந்துவிட்டு செல்கிறார். நாம் மரணிக்கவில்லை. உயிருடன்தான் இருக்கிறேன். நீங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்துடன் இறைவனுடன் இந்த விசுவாச தொடர்பு கொண்டால் அது தான் உங்களுக்கும் வாழ்வு தரும்.

அவரது மனைவிக்கு வயது 60. சேட் சாஹிபிற்கு கிட்டத்தட்ட 70 வயது. அவரது பிள்ளைகளுள் ஒருவர் டாக்டர். இன்னொருவர் தொழில் செய்கிறார். ஒருவர் வக்கீல். அவரது மகள் ராவல்பிண்டியில் இருக்கிறார். அல்லாஹ் ஷஹீதின் தகுதியை உயர்த்துவானாக.

இதல்லாமல் இருவர் காயமடைந்துள்ளனர். அவர்களுக்காகவும் துஆவுக்கான அறிவிப்பு செய்ய விரும்புகிறேன்.

1. செய்யது அஹ்மத் சாஹிப். முதல் ரமலான் அல்லது அதற்கு முன் தினம் தனது கடையில் இருக்கும் போது சுட்டுப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

2. டாக்டர் மன்னான் சித்திகி சாஹிபுடன் இருந்தவர். படுகாயமடைந்துள்ளார். அவர் பெயர் ஆரிப் சாஹிப். இருவரும் படுகாயமடைந்து மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிந்து ஆரோக்கியம் வழங்குவானாக.

இந்த ரமலான் மாதத்தில் இந்த பெயர்தாங்கி முஸ்லிம்களின் ஒரு கூட்டம் நற்கூலி கிடைக்கும் என்று நினைத்து இன்னும் வேகமாக இச்செயலில் இறங்கி விடுகிறது.

அவர்களுக்கு அல்லாஹ் என்ன முடிவைத் தரப்போகிறான் என்று அவர்கள் அறிவதில்லை. அல்லாஹ் நம்மையும் சமுதாயத்தையும் இந்த மனித விரோத சக்திகளிடமிருந்து பாதுகாப்பாக வைப்பானாக.

இந்த நாட்களில் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் நம் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. (ஆமீன்)

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 12.09.2008**

Translated by : **Muallim M. Nisamudeen Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**